LIBRARY
6 JUL 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 14th March 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER: Question No. 335.

SRI N. K. PALANISAMI: What about questions left over on the previous day?

DEPUTY SPEAKER: They will be taken up tomorrow.

Prohibition Act

*335 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களையும், குடிப்பவர்களையும் பிடித்துத் தந்த கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டனவா?

(ஆ) எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது?

(இ) மதுவிலக்குச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டதின் காரணமாக குற்றங்கள் குறைந்துள்ளனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Government have sanctioned rewards in the shape of a reading room with a radio set to two villages, viz., Poondi and Tiruvanmiyur in Chingleput district for help rendered by the villagers in the detection of illicit distillation cases. A total sum of Rs. 6,230 has been sanctioned for the construction of a reading room and for the installation and maintenance of a radio set in each of the two villages.

(*c*) Yes, Sir.

SRI S. M. ANNAMALAI: இந்த மதுவிலக்குச் சட்டம் வந்த பிறகு வழக்குகள்தான் குறைந்து வருகிறதேயொழிய வருடா வருடம் ஊழல் அதிகமாகயிருக்கிறது என்பது சர்க்காருக்குத்

[14th March 1960

தெரியுமா ? அந்தக் காரணத்தால்தான் மதுவிலக்குத் திட்டம் தோல்வியுற்றது என்று மக்களால் பேசப்படுகிறது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குற்றங்கள் குறையாமல் வழக்குகள் மட்டும் குறைந்திருக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

SRI A. A. RASHEED : May I know whether individuals also are awarded any prizes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If a particular individual is responsible for detection of crime, the award of some recognition would also be considered.

SRI T. T. DANIEL : May I know on what basis these awards are given? Is it on the basis of the number of cases that are detected in the village or on what?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : With reference to the cases which are referred to in the answer, the community in the village made their own contribution in the detection of crime which it was found difficult to detect before. Therefore, as a recognition of the service rendered by the people of the village, these radio sets and other things were presented to the villagers.

SRI V. K. KOTHANDARAMAN : போலீஸ் போடும் சாராயக் கேஸ்களில் பாதிதான் தண்டிக்கப்படுகிறது, பாதி தள்ளுபடி செய்யப் படுகிறது. அதனால், ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே இனிமேல், நான் குடிக்கவில்லை என்று சொல்லுகிறவர்களின் ரத்தம் போன்றவைகளை பரிசீலனைக்கு அனுப்பி வைத்து அதன் முடிவு தெரிந்த பிறகு தான் கேஸ் போட ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் கேஸ் போடுகிறார்கள். அந்தக் கேஸ்களை கோர்ட் முடிவு செய்கிறார்கள். தண்டிக்கப்படாத கேஸ்களை போடக் கூடாது என்று சொன்னால் ஒரு விவகாரமும் நடத்தமுடியாது.

SRI A. GOVINDASAMY : குடித்திருக்கிறார்கள் என்பதற்கு சர்டிபிகேட் கொடுக்க வேண்டிய டாக்டர், குடித்த தினத்தில் கொடுத்தால்தான்செல்லுமா ? மறுதினம் சர்டிபிகேட் கொடுப்பது தெரியுமா ? அதுவும் செல்லுபடியாகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மறுதினம் கொடுக்க முடியுமா இல்லையா என்பது டாக்டர்கள் சொல்லவேண்டியது. டாக்டர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம்.